Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349


தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | புதன்கிழமை, மே 29, 2024 | இதழ் 46

# எஸ்சி, எஸ்டி, ஓபிசி, பிற பிற்பட்ட வகுப்பினரை இருளில் வைத்து கொள்ளை அடிக்கும் எதிர்கட்சிகள்: மோடி எச்சரிக்கை

## ‘தலித்துக்களின் நலம் விரும்பிகள் என்று அவர்கள் சொல்லிக் கொள்வது உண்மையல்ல; பரம எதிரிகள்’



சென்னை, 29 மே 2024: “எஸ்சி, எஸ்டி, ஓபிசி மற்றும் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை இருளில் வைத்து அவர்கள் (எதிர்க்கட்சியினர்) கொள்ளையடிக்கிறார்கள். எனவே அவர்களை நான் எச்சரிக்க விரும்புகிறேன்” என்று பிரதமர் மோடி காட்டமாகத் தாக்கினார்.

வரப்போகும் நெருக்கடியை நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டிய நேரம்தான் இந்த தேர்தல். எனவே இது குறித்து மக்களுக்கு விளக்கமளித்து வருகிறேன் என்று தன்னிலையை உணர்த்தினார்.

தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுவரும் பிரதமர் மோடி, தனியார் செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வு மீறப்படுகிறது; அதுவும் ஓட்டு வங்கி அரசியலுக்காக மீறப்படுகிறது. தலித்துகள், பழங்குடியினரின் நலம் விரும்பிகள் என்று தங்களை அழைத்துக் கொள்பவர்கள் உண்மையில் அவர்களுக்குப் பரம எதிரிகள். எனது தலித், பழங்குடியினர், ஓபிசி சகோதரர், சகோதரிகளின் உரிமைகளுக்காக போராடுவேன்.

மத்திய அரசு அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, சிபிஐ போன்றவற்றை பயன்படுத்தி வருவதாக எதிர்க்கட்சிகள் கூறுவதில் என்ன ஆதாரம் இருக்கிறது? அவர்களின் குப்பையை உரமாக மாற்றி, அதில் இருந்து நாட்டுக்கு நல்லவற்றை விளைவிப்பேன். மன்மோகன் சிங் ஆட்சியில் 10 ஆண்டுகளில் ரூ.34 லட்சம் மட்டுமே அமலாக்கத்துறை பறிமுதல் செய்தது. ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் ரூ.2,200 கோடியை பறிமுதல் செய்துள்ளது. 2,200 கோடி ரூபாயை வெளிக்கொண்டுவந்தவரை மதிக்க வேண்டும், துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.

‘‘ராகுல் காந்தி, கெஜ்ரிவாலுக்கு பாகிஸ்தான் ஆதரவு அளிப்பது ஏன்? இதுகுறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்'. எங்களுக்கு எதிராக வெறுப்பை வெளிப்படுத்தும் சிலருக்கு பாகிஸ்தானிடம் இருந்து ஒப்புதல் கிடைக்கிறது. அங்கிருந்து ஆதரவு குரல்கள் வருவது ஏன்? என்பது எனக்கு புரியவில்லை.இது மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். அதனால் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

நான் வகிக்கும் பதவியைப் பொறுத்தவரை இது போன்ற பிரச்சனைகளில் கருத்து தெரிவிக்கக் கூடாது என்றே நினைக்கிறேன்.இந்தியா ஒரு முதிர்ந்த ஜனநாயகம், வளமான தேர்தல் கொள்கைகள், மரபுகளைக் கொண்ட நாடு. இந்தியாவின் வாக்காளர்களும் தங்கள் எண்ணங்களில் முதிர்ச்சியடைந்தவர்கள். அதனால், எந்த வெளிப்புற சக்தியாலும் பாதிக்கப்படமாட்டார்கள்.

‘‘யார் சிறைக்கு செல்ல வேண்டும் என்பதை பிரதமர் மோடிதான் முடிவு செய்வார் என டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம்சாட்டியிருக்கிறார். “இவர்கள் அரசியல் சாசனத்தைப் படித்தால் நன்றாக இருக்கும், நாட்டின் சட்டத்தைப் படித்தால் நன்றாக இருக்கும், நான் யாரிடமும் எதுவும் சொல்லத் தேவையில்லை’’.


இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுடனும் நட்பு ரீதியிலான உறவை நாங்கள் பின்பற்றி வருகிறோம். ஜனநாயக நாட்டில் பகை என்பதற்கு இடம் இல்லை. இப்படி இருக்கும் சூழலில் நான் ஒடிசாவின் எதிர்காலத்தை கருத்தில் கொள்வதா அல்லது நவீன் பட்நாயக் உடனான உறவு முக்கியமா என்ற முடிவை எடுக்க வேண்டி இருந்தது. எனக்கு ஒடிசாவின் எதிர்காலம் தான் முக்கியம். அதற்காக நான் சில தியாகங்களை செய்ய வேண்டி இருந்தது. தேர்தலுக்கு பிறகு அனைவரையும் நான் சமாதானம் செய்வேன். இங்கு எனக்கு யாருடனும் பகை என்பது கிடையாது.

கடந்த 25 ஆண்டு காலமாக ஒடிசாவில் எந்தவித முன்னேற்றமும் இல்லை. ஒட்டுமொத்த ‘சிஸ்டத்தையும்’ ஒரு குழு தனது கைகளில் வைத்து உள்ளது. அதன் பிடியில் இருந்து ஒடிசா வெளிவந்தால் வளர்ச்சிப் பாதையை எட்டும்.

இயற்கை வளங்கள் அதிகம் கொண்ட மாநிலம். அந்த மாநிலத்தின் மக்கள் வறுமையில் வாடுவதை பார்த்து எனது மனம் வருந்துகிறது. இதற்கு மாநிலத்தில் ஆட்சியில் உள்ள அரசு தான் காரணம். அந்த மாநிலத்தின் அடையாளம் மற்றும் மக்கள் தங்களது உரிமையை அவசியம் பெற வேண்டும்.

ஒடிசாவின் தலையெழுத்து மாறும். ஆட்சி மாற்றம் நிகழும். தற்போது ஆட்சியில் உள்ளவர்களின் ஆட்சி காலம் ஜூன் 4-ம் தேதியுடன் காலாவதி ஆகிவிடும் என நான் சொல்லி இருந்தேன். வரும் ஜூன் 10-ம் தேதி அன்று பாஜக உறுப்பினர் முதல்வராக பொறுப்பு ஏற்பார். மேற்குவங்கத் தேர்தலில் திரிணமுல் காங்கிரஸ் கட்சி பிழைப்புக்காக போராடுகிறது. கடந்த சட்டசபைத் தேர்தலில் நாங்கள் 3 எம்.எல்.ஏ.வாக இருந்தோம், பின்னர் அம்மாநில மக்கள் எங்களுக்கு 80 இடங்களை கொடுத்தனர். இந்த முறை மேற்கு வங்கத்தில் பா.ஜ.க. பெரிய வெற்றியைப் பெறும்’’. இவ்வாறு மோடி கூறினார்.

# புதுக்கோட்டையில் பாதிரியார் வீட்டில் 80 சவரன் நகைகள் திருட்டு




சென்னை, 29 மே 2024: புதுக்கோட்டையில் பூட்டியிருந்த பாதிரியார் வீட்டில் இருந்த 80 சவரன் நகைகள் திருடப்பட்ட சம்பவம் குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர்.

புதுக்கோட்டை கணேஷ் நகர் 1ம் வீதியைச் சேர்ந்தவர் ஜான் தேவ சகாயம். இவர் டி.இ.எல்.சி. சபையில் பாதிரியாராக உள்ளார். இவரது மனைவி எஸ்தர் காலான் எழிலரசி. அரசுப் பள்ளி ஆசிரியர். இக்குடும்பத்தினர் அனைவரும் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சில நாட்களுக்கு முன்பு வீட்டை பூட்டிவிட்டு சென்று விட்டனர்.

சிகிச்சைகள் முடிந்து கோவையிலிருந்து இன்று அவர்கள் ஊர் திரும்பினர். அப்போது, வீட்டின் பின்புறம் உள்ள இரும்புக் கதவின் கம்பிகளை அறுத்து, உடைந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் வீட்டுக்குள் சென்று பார்த்தபோது பீரோவின் பூட்டு உடைக்கப்பட்டு அதில் இருந்த சுமார் 80 சவரன் நகைகள் திருடப்பட்டு இருந்தது தெரியவந்தது.

இது குறித்து கிடைத்த தகவலின் பேரில் கணேஷ் நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தகவலின் பேரில் அங்கு வந்த போலீசார் மோப்ப நாய் மற்றும் கைரேகை நிபுணர்களுடன் விசாரணை மேற்கொண்டனர்.

கைரேகை நிபுணர்கள் பீரோவில் இருந்த கொள்ளையர்களின் கைரேகைகளை பதிவு செய்துள்ளனர்.கொள்ளை குறித்து வழக்கு பதிவு செய்துள்ள கணேஷ் நகர் போலீசார், கொள்ளையர்களை



தேடி வருகின்றனர்.

கடந்த 2 நாட்களுக்கு முன்பு புதுக்கோட்டையில் பூட்டியிருந்த ஓய்வு பெற்ற வட்டாட்சியர் வீட்டில் 19 சவரன் நகை திருடப்பட்டது. இதே போல, அறந்தாங்கியில் பூட்டியிருந்த 2 கடைகளின் பூட்டுகளை உடைத்து அங்கிருந்த சுமார் ரூ.90 ஆயிரத்தை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர். இவ்வாறு பூட்டிய வீடு மற்றும் கடைகளை குறி வைத்து திருட்டு சம்பவங்கள் நடந்து வருகின்றன. எனவே, போலீசார் இதுபோன்ற குற்ற செயல்களைத் தடுப்பதற்கு இரவு நேர ரோந்து பணிகளை அதிக கவனம் செலுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkural@gmail.com
RNI No. - TNTAM24840
உள்ளது உள்ளபடி

புதன்கிழமை,
மே 29, 2024

# 8-ம் வகுப்பு மாணவன் வெட்டிக்கொலை: வாலிபர் கைது



சென்னை, 29 மே 2024: 8-ம் வகுப்பு மாணவன் வெட்டிக்கொலை செய்யப்பட்ட வழக்கில் வாலிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காரைக்காலை அடுத்த நிரவி பகுதி திருமலைராஜன் ஆற்றுப்பாலம் அருகே உள்ளது ஒயிட் ஹவுஸ் காலனி. இப்பகுதியை சேர்ந்த தச்சு தொழிலாளி சிங்காரவேலு என்பவரின் மகன் சந்தோஷ் (வயது 13). 8-ம் வகுப்பு படித்து விட்டு விடுமுறையில் இருந்து வந்தான். இந்தநிலையில் இவன் தனது நண்பர்களுடன் வீட்டின் அருகே நேற்று மதியம் விளையாடிக் கொண்டிருந்தான். மாலையில் திடீரென மாணவனை காணவில்லை. இதனால் சந்தோசை அவனது பெற்றோர்கள் தேடிப்பார்த்தனர். அப்போது இரவு 7 மணி அளவில் வீட்டின் அருகே சந்தோஷ் கழுத்து உள்பட உடலில் பல இடங்களில் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது.

விசாரணையில் அதே பகுதியை சேர்ந்த 19 வயது வாலிபரும், சந்தோஷும் அந்த பகுதியில் விளையாடியது தெரியவந்தது. இதனையடுத்து விசாரிப்பதற்காக அந்த வாலிபரை போலீசார் தேடிய போது அவர் தலைமறைவானது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த வாலிபரை புதுச்சேரி போலீசார் தற்போது கைது செய்துள்ளனர்.

# அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் நீட்டிப்பு இல்லை: சுப்ரீம் கோர்ட் அதிரடி



சென்னை, 29 மே 2024: டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன் நீட்டிப்பு இல்லை என்று சுப்ரீம் கோர்ட் விடுமுறை கால நீதிபதிகள் அமர்வு தெரிவித்துள்ளது.

'கலால் கொள்கை ஊழலில்' தொடர்புடைய பணமோசடி வழக்கில் கைதான முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு நாடாளுமன்ற தோதலில் பிரச்சாரம் செய்வதற்காக கடந்த மே 10ம் தேதி சுப்ரீம் கோர்ட் 21 நாட்கள் இடைக்கால ஜாமீன் வழங்கியது.

7 கட்ட தேர்தலின் கடைசி கட்ட வாக்குப்பதிவு முடிந்த ஒரு நாள் கழித்து, ஜூன் 2ம் தேதி கெஜ்ரிவால் சரணடைய வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட் அறிவுறுத்தி இருந்தது. 'திடீரென குறைந்த உடல் எடை மற்றும் அதிக கீட்டோன் அளவுகள்' ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பிஇடி சிடி ஸ்கேன் உள்பட பல மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக தனது இடைக்கால ஜாமீனை 7 நாள்களுக்கு நீட்டிக்கக் கோரி டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்து இருந்தார்.

இவ்வழக்கை விசாரித்தை சுப்ரீம் கோர்ட் விடுமுறை கால நீதிபதிகள் அமர்வு, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமீன் நீட்டிப்பு குறித்து தலைமை நீதிபதிகள் அமர்வு முடிவு செய்வார்கள் என்றும், இவ்வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதால் நாங்கள் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

அதாவது இடைக்கால ஜாமீனை நீட்டிக்க கோரிய கெஜ்ரிவாலின் ஜாமீன் மனுவை சுப்ரீம் கோர்ட் நிராகரித்துள்ளது.

# இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் பதவி மோடி, அமித்ஷா, சச்சின், தோனி பெயரில் போலி விண்ணப்பங்கள்: பிசிசிஐ குழப்பம்

சென்னை, 29 மே 2024: இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் பதவிக்கு மோடி, அமித்ஷா, சச்சின், தோனி பெயரில் போலி விண்ணப்பங்கள் குவிந்ததால் பிசிசிஐ நிர்வாகிகள் குழப்பம் அடைந்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் டி20 உலகக்கோப்பை தொடருடன் நிறைவடைகிறது. இதைத் தொடர்ந்து இந்திய ஆண்கள் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் பதவிக்கு ராகுல் டிராவிட்டிற்கு பிறகு அவருக்கு பொருத்தமான மாற்றாக யாரை தேர்ந்தெடுக்கலாம் என்று இந்திய கிரிக்கெட் கவுன்சிலான பி.சி.சி.ஐ. தீவிரமாக ஆலோசித்து வருகிறது. மே 13 முதல் இந்திய அணி பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், அது நேற்றுடன் நிறைவு பெற்றது. கூகுள் பார்ம் மூலம் விண்ணப்பங்கள் பெறப்பட்டதால் பலர் போலி விண்ணப்பங்களை பதிவு செய்துள்ளது தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், இந்திய கிரிக்கெட் அணி பயிற்சியாளர் பதவிக்கு மோடி, அமித்ஷா, சச்சின், தோனி, சேவாக் ஆகிய பெயரில் போலியாக விண்ணப்பங்கள் குவிந்துள்ளதால் தேர்வுக்குழு குழுப்பம் அடைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்திய அணியின் தலைமை பயிற்சியாளர் பதவிக்கு 3 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாகவும் பதிவான விண்ணப்பங்களில் போலி எது, உண்மை எது என கண்டறிய தாமதம் ஆகும் எனவும் பி.சி.சி.ஐ. தகவல் தெரிவித்துள்ளது.

# மறுசீரமைப்புப் பணிகளுக்காக டெல்லி ரயில் நிலையம் மூடப்படாது




சென்னை, 29 மே 2024: டெல்லி ரயில் நிலையம் மறுசீரமைப்பதற்காக பணிகளுக்காக முழுமையாக மூடப்படமாட்டாது என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டெல்லி ரெயில் நிலையத்தை மறுசீரமைப்பதற்காக பணிகளுக்காக இந்த ஆண்டு இறுதிக்குள் ரெயில் நிலையம் முழுமையாக மூடப்படும் என்று சில சமூக ஊடகங்களில் செய்தி வெளியிட்டனர். இந்நிலையில், அந்த தகவல் தவறானது என்றும், டெல்லி ரெயில் நிலையம் மறுசீரமைப்பதற்காக பணிகளுக்காக முழுமையாக மூடப்பட மாட்டாது என்று ரயில்வே அமைச்சகம் அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரயில்வே அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

'ஒரு ரெயில் நிலையம் மறுசீரமைக்கடும் போது, ஒரு சில ரெயில்கள் தேவைக்கேற்ப திருப்பி விடப்படும் அல்லது ஒழுங்குபடுத்தப்படும். ரெயில்களின் இத்தகைய மாற்றுப்பாதைகள்/விதிமுறைகள் பற்றிய தகவல்கள் முன்கூட்டியே தெரிவிக்கப்படும். முன்னதாக, டெல்லி நிலையத்திலிருந்து தற்காலிகமாக மூடப்பட்டு ரெயில் சேவைகள் ஆனந்த் விஹார், ஹஸ்ரத் நிஜாமுதீன், டெல்லி கன்டோன்மென்ட் மற்றும் சராய் ரோஹில்லா போன்ற ரெயில் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவது குறித்து தகவல்களும் தவறானவை. இதுபோன்ற தவறான தகவல்கள் பொதுமக்களிடையே தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ரயில்வே அமைச்சகம் 2023 ஆம் ஆண்டு அமிர்த் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள பல ரெயில் நிலையங்களை மறுசீரமைக்க உள்ளது. தற்போது நாடு முழுவதும் உள்ள பல்வேறு ரெயில்வே மண்டலங்கள் மற்றும் பிரிவுகளில் 1,318 ரெயில் நிலையங்கள் மறுசீரமைப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் டெல்லி, டெல்லி கண்டோன்மென்ட், ஆனந்த் விஹார், குருகிராம், காசியாபாத் மற்றும் ஃபரிதாபாத் உள்ளிட்ட டெல்லி மற்றும் தேசிய தலைநகர் மண்டலத்தில் (மூசிஸி) நிலையங்கள் உள்ளன.

# அக்னி நட்சத்திரம் நிறைவு; வெயிலின் தாக்கம் சில நாள் தொடரும்: சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, 29 மே 2024: அக்னி நட்சத்திரம் இன்றுடன் முடிவடைந்தாலும், இன்னும் சில நாட்களுக்கு வெயிலின் தாக்கம் இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பொதுவாக அக்னி நட்சத்திரம் தொடங்கும் நாட்களில் வெயில் உக்கிரமாக இருக்கும் எனக் கூறுவார்கள். ஆனால் இந்த கோடைக்காலம் தொடங்குவதற்கு முன்பே வெயில் வெளுத்து வாங்கியது. பல மாவட்டங்களில் வெயில் சதமடித்தும் வந்தது. இதனையடுத்து கத்திரி வெயில் தொடங்கியதிலிருந்து வெயில் வாட்டி வதைத்தது.

இதனால் வெப்ப அலை இயல்பைவிட அதிகமாக இருக்கும் எனவும், கோடை மழை பெய்யும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. அதன்படி பெய்த கோடை காலம் கொஞ்சம் வெப்பத்தை தணித்தது. இதற்கிடையே வங்கக்கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வினால் வெப்பத்தின் தாக்கம் குறைவாக இருந்தது.

இந்நிலையில் இன்றுடன் அக்னி நட்சத்திரம் நிறைவடைகிறது. இருந்தாலும் வெயிலின் தாக்கம் அதிகமாகவே இருக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மட்டுமின்றி புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இயல்பைவிட வெப்பநிலை அதிகமாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# மே மாதத்திற்கான ரேஷன் பொருட்களை ஜூன் மாதம் முதல் வாரம் வரை பெறலாம் - தமிழக அரசு



சென்னை, 29 மே 2024: மே மாதத்திற்கான பாமாயில், துவரம் பருப்பை ஜுன் மாதம் முதல் வாரம் வரை பெற்றுக் கொள்ளலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழ்நாடு அரசு, சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக 2.23 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம்தோறும் தலா ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.30க்கும் ஒரு லிட்டர் பாமாயில் ரூ.25க்கும் மானிய விலையில் வழங்கி வருகிறது,

பாராளுமன்றத் தேர்தல் நடத்தை விதிகள் காரணமாக பாமாயில் மற்றும் துவரம் பருப்புக்கான ஒப்பந்தப்புள்ளிகள் மீதான முடிவுகள் மேற்கொண்டு அப்பண்டங்களைக் கொள்முதல் செய்வதில் காலதாமதம் நேரிட்டது. இருப்பினும் அரசின் தொடர்ந்த சீரிய முயற்சிகள் காரணமாக நகர்வுப் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு நாளது தேதியன்று (27.5.2024) 82,82,702 குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா ஒரு கிலோ துவரம் பருப்பினையும் 75,87,865 குடும்ப அட்டைதாரர்களுக்குத் தலா ஒரு லிட்டர் பாமாயில் பாக்கெட்டினையும் நியாயவிலைக் கடைகளிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. 24,96,510 கிலோ துவரம் பருப்பு மற்றும் 33,57,352 பாமாயில் பாக்கெட்டுகள் நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுச் செல்ல தயார் நிலையிலும் 8,11,000 கிலோ துவரம் பருப்பு மற்றும் 7,15,395 பாமாயில் பாக்கெட்டுகள் கிடங்குகளில் நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பும் பொருட்டு நாளது தேதியில் இருப்பில் வைக்கப்பட்டுள்ளன. மீதம் பெற வேண்டிய துவரம்பருப்பு மற்றும் பாமாயில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெற்று விரைவாக கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

குடும்ப அட்டை தாரர்களுக்கு மே 2024 மாத ஒதுக்கீட்டினை இம்மாத இறுதிக்குள் வழங்கிட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் மே 2024 மாதத்தில் பருப்பு மற்றும் பாமாயில் பெற முடியாதவர்கள் வசதிக்காக ஜுன் 2024 மாதம் முதல் வாரம் வரை நியாயவிலைக்கடைகளில் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பெற்றுக் கொள்ள தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளும்படி மாவட்ட வழங்கல் அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

குடும்ப அட்டைதாரர்களின் நன்மையினைக் கருத்தில் கொண்டு மே 2024 மாதத்தில் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட் பெற இயலாத அட்டைதாரர்கள்அவர்களுக்கான மே 2024 மாத துவரம் பருப்பு மற்றும் பாமாயில் பாக்கெட்டினை ஜுன் 2024 மாதம் முதல் வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# மேடம் புதுமையான ஸ்டோர் கருத்துடன் அடுத்த நிலை வாடிக்கையாளர் அனுபவத்தை வெளிப்படுத்துகிறார்







சென்னை, 29 மே 2024: பிரபலமான பெண்களுக்கான ஃபேஷன் பிராண்டான மேடம், ஃபேஷன்-ஃபார்வர்டு பெண்களுக்கான இறுதி பிரீமியம் அனுபவத்துடன் ஷாப்பிங்கில் புரட்சியை ஏற்படுத்துவதாக உறுதியளிக்கும் புதிய ஸ்டோர் கான்செப்ட்டை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைந்துள்ளது. புதுமை, நிலைத்தன்மை மற்றும் சமீபத்திய தொழில்நுட்பத்தை உள்ளடக்கிய புதிய கருத்து அழகியலுக்கு அப்பாற்பட்டது, பிரீமியம் ஷாப்பிங் அனுபவத்தில் கவனம் செலுத்துகிறது.

மறுவரையறை செய்யப்பட்ட பிரீமியம் சுற்றுப்புறம் அழகியல் மற்றும் செயல்பாடு ஆகியவற்றின் தடையற்ற கலவையைக் கொண்டுள்ளது, அதிநவீன உள்துறை வடிவமைப்பு கூறுகளை ஒருங்கிணைக்கிறது. காகிதத்தின் குறைக்கப்பட்ட பயன்பாட்டை இணைப்பது பிராண்டின் நிலைத்தன்மையை நோக்கிய மற்றொரு நகர்வைக் குறிக்கிறது. பிராண்டின் நோக்கத்துடன் இந்த கருத்து எதிரொலிக்கிறது. இது ஊக்கமளிப்பதற்கும் அதிகாரம் அளிப்பதற்கும் வடிவமைக்கப்பட்ட இடமாகும், இது வாடிக்கையாளர்களின் தனித்துவமான பாணியை மீண்டும் கண்டறிய ஒரு அற்புதமான பயணத்தை மேற்கொள்ளும்.

# கார்வேர் டெக்னிக்கல் ஃபைபர்ஸ் நிதியாண்டில் 22% வரி உயர்வுக்கு முன் ஒருங்கிணைக்கப்பட்ட நிகர லாபம்

சென்னை, 29 மே 2024: இந்திய மற்றும் உலகளாவிய சந்தைகளுக்கான தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் கார்வேர் டெக்னிக்கல் ஃபைபர்ஸ் லிமிடெட், மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி முடிவுகளை இன்று அறிவித்துள்ளது. ஒருங்கிணைந்த: கியூ4 எஃப்ஒய்24 சிறப்பம்சங்கள்:

நிகர விற்பனை 3 சதவீதம் அதிகரித்து ரூ. கியூ4 எஃப்ஒய்24 இல் 382.3 கோடி ஒப்பிடும்போது ரூ. கியூ4 எஃப்ஒய்23 இல் 370.5 கோடி

வரிக்கு முந்தைய லாபம் 17% அதிகரித்து ரூ. கியூ4 எஃப்ஒய்24 இல் 91.5 கோடி ஒப்பிடும்போது ரூ. கடந்த ஆண்டு இதே காலத்தில் 78.5 கோடி

வரிக்குப் பிந்தைய நிகர லாபம் 16%

சிறபபமசஙகள:

நிகர விற்பனை 2% அதிகரித்து ரூ. எஃப் ஒய்24 இல் 1325.6 கோடி ஒப்பிடும்போது ரூ. எஃப் ஒய்23 இல் 1305.6 கோடி

வரிக்கு முந்தைய லாபம் 22% அதிகரித்து ரூ. 271.7 கோடி எஃப் ஒய்24 இல் ரூ. கடந்த ஆண்டு இதே காலத்தில் 223.2 கோடி

வரிக்கு பிந்தைய நிகர லாபம் 21% அதிகரித்து ரூ. 208.2 கோடி எஃப் ஒய்24 இல் ரூ. எஃப் ஒய்23 இன் தொடர்புடைய காலத்தில் 172.2 கோடி

ஐரோபபாவின வலுவான தேவையின் காரணமாக முந்தைய கியூ4எஃப் ஒய்23 ஐ விட கியூ4எஃப் ஒய்24 17% லாப வளர்ச்சியைக் காட்டியுள்ளது. மேலும் மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு கலவை மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட தீர்வுகளுக்கான வலுவான தேவை ஆகியவற்றின் பின்னணியில், முந்தைய ஆண்டின் கியூ4 ஐ விட இயக்க விளிம்புகள் 200 அடிப்படை புள்ளிகளால் மேம்படுத்தப்பட்டுள்ளன.

எஃப் ஒய்24 இல் நிறுவனம் ரூ.200கோடி பிஏடி மற்றும் இபிஎஸ் என்ற மைல்கல்லைக் கடக்க முடிந்தது. 100/-. எஃப் ஒய்24 இன் வளர்ச்சியானது மீன்வளர்ப்பு, புவிசார் செயற்கை மற்றும் உள்நாட்டு வணிகம் ஆகியவற்றால் தூண்டப்பட்டது. எஃப் ஒய்24 இல் வரிக்கு முந்தைய நிகர லாபம் 22% அதிகரித்துள்ளது. செயல்பாடுகளில் இருந்து நிதி உருவாக்கத்தில் நீடித்த கவனம், ஆண்டிற்கான வலுவான இலவச பணப்புழக்கத்தை வழங்கியது. எங்களின் புதிய தீர்வுகளுக்கு சிலி மற்றும் நார்வேயில் இருந்து மீன்வளர்ப்பு பிரிவில் தொடர்ந்து நல்ல தேவை இருப்பதால் வலுவான எச்1எஃப் ஒய்25 ஐ எதிர்பார்க்கிறோம். ஜியோசிந்தெடிக்ஸ் வணிகமும் அதன் வளர்ச்சி வேகத்தை நல்ல பார்வையுடன் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பப்புவா நிலச்சரிவில் புதைந்து 2000 பேர் பலி: மோடி இரங்கல்

சென்னை, 29 மே 2024: பப்புவா நியூ கினியாவிற்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

நியூ கினியாவில் நிலச்சரிவு காரணமாக உயிரிழந்தவர்களுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள பதிவில், "பப்புவா நியூ கினியாவில் நிலச்சரிவினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் வருத்தம் அளிக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறோம். சாத்தியமான அனைத்து ஆதரவையும், உதவிகளையும் வழங்க இந்தியா தயாராக உள்ளது என தெரிவித்துள்ளார்.

இந்த கோர விபத்துக்கான காரணம் இன்னும் முழுமையாக அறியப்படாத நிலையில், பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு சா□வதேச நாடுகள் உதவ வேண்டும் என்று பப்புவா நியூ கினியா தரப்பில் கோரப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள பப்புவா நியூ கினியாவிற்கு உதவும் பொருட்டு, இந்தியா சார்பில் நிவாரண நிதியாக, 1 மில்லியன்(10 லட்சம்) டாலர் நிதியுதவி உடனடியாக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு மண்ணுக்கடியில் புதையுண்டவர்களை தேடும் பணிகள், 5-வது நளாக இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது.

# குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரிப்பு: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

சென்னை, 29 மே 2024: குற்றாலத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்து சீசன் தொடங்கியுள்ளதால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தென்காசி மாவட்டம், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த 17-ஆம் தேதி பெய்த மழையின் காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள பழைய குற்றால அருவி, குற்றாலம் மெயின் அருவி, ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த வெள்ளப்பெருக்கில் சிக்கி பழைய குற்றாலம் அருவியில் குளித்துக் கொண்டிருந்த அஸ்வின் என்ற 17 வயது சிறுவன் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டு உயிரிழந்த நிலையில், குற்றாலம் பகுதியில் உள்ள அனைத்து அருவிகளும் மூடப்பட்டு குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தன. கடந்த 2 நாட்களுக்கு முன்பு பழைய குற்றாலம் மற்றும் ஐந்தருவியில் குளிக்க அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் சாரல் மழையால் ஐந்தருவி, பழைய குற்றாலம், புலி அருவி, சிற்றருவி, மெயின் அருவி, உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் மிதமான தண்ணீர் வரத்து வரத் தொடங்கியதால், குற்றாலத்தில் குளுகுளு சீசன் தொடங்கியது. குற்றாலத்தில் உள்ள அனைத்து அருவிகளிலும் சீசன் தொடங்கி உள்ள நிலையில் சுற்றுலா பயணிகள் உற்சாகமடைந்துள்ளனர்.

# தனியாரிடமிருந்து வாங்கும் மின்சாரத்துக்கு கூடுதலாக 34 காசு மேல் வரி வசூலா? திமுக அரசுக்கு ஓபிஎஸ் கண்டனம்



சென்னை, 29 மே 2024: தனியாரிடமிருந்து வாங்கும் மின்சாரத்துக்கு கூடுதலாக 34 காசு மேல் வரி வசூலா? என்று திமுக அரசுக்கு ஓ. பன்னீர்செல்வம் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியை சீரழித்துக் கொண்டிருக்கிறது என்றும் ஓ.பன்னீர்செல்வம் சாடினார்.

இதுகுறித்து முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தொழில்கள் வளரவேண்டும், தொழிலாளர்கள் வாழவேண்டுமென்ற அடிப்படையில் ஓர் அரசு செயல்படுமேயானால், உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் அரசாங்கத்திற்கான வருவாய் பெருகி நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடையும். ஆனால், கடந்த மூன்று ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் தொழில் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சி சீரழிந்துக் கொண்டிருக்கின்றது.

'தொழில் நிறுவனங்களை நலிவிலிருந்து மீட்போம்' என்று வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஆட்சிக்கு வந்த பிறகு தொழில் நிறுவனங்களை நசுக்கும் பணியை செய்து வருகிறது. மின் கட்டண உயர்வு, நிலைக் கட்டண உயர்வு, உச்சநேர மின் கட்டணம், மேற்கூரை சூரியசக்திக்கான மின் கட்டணம் போன்றவற்றை உயர்த்தி, தொழிலையே மேற்கொள்ள முடியாத அளவுக்கு தொழில் முனைவோரையும், தொழிலாளர்களையும் வஞ்சித்து வருகின்ற அரசாக தி.மு.க. அரசு விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில், எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றும் விதமாக, வெளிச்சந்தையில் இருந்து மின்சாரம் பெற்றுவரும் தொழில் துறையினருக்கு, ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 34 காசு மேல்வரி (சர்சார்ஜ்) விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது தொழில் துறையினருக்கு பேரதிர்ச்சியை அளித்துள்ளது.

தமிழ்நாட்டில் உயரழுத்தப் பிரிவில் இடம் பெறும் தொழிற்சாலைகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திடமிருந்து மட்டுமல்லாமல், வெளிச்சந்தையிலிருந்தும் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டுள்ளது. வெளிச்சந்தை மின்சாரத்தை எடுத்துவர தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வழித்தடம் பயன்படுத்தப்படுவதால், அதற்கான கட்டணத்தை தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டும்.

இதன்படி, யூனிட் ஒன்றிற்கு ஒரு ரூபாய் 96 காசுகள் செலுத்தப்படுகிறது. இந்த நிலையில், ஒரு யூனிட்டிற்கு 34 காசுகள் மேல் வரி வசூலிக்க தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளதாகவும், இதற்கான அனுமதியை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் கோரியுள்ளதாகவும் செய்தி வந்துள்ளது. ஏற்கெனவே ஆண்டுதோறும் மின் கட்டணம் உயர்த்தப்படுவதன் காரணமாக தொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தி.மு.க. அரசின் மேல் வரி நடவடிக்கை என்பது தொழில் துறையை நசுக்குவதற்குச் சமம். இதுதான் தொழில் துறையை நலிவிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கையா? ஒருவேளை வாக்குறுதிக்கு முரணாக செயல்படுவதுதான் 'திராவிட மாடல்' போலும்.

இதனை தி.மு.க. அரசு நடைமுறைப்படுத்துமேயானால், தொழில் துறை நலிந்துவிடுவது மட்டுமல்லாமல், தொழிலாளர்களுக்கும் வேலை பறிபோகும் சூழ்நிலை உருவாகும். இது தவிர, அரசாங்கத்தின் வருமானமும் குறையக்கூடும்.

எனவே, முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, தொழில் துறையினரின் நலனையும், தொழிலாளர்களின் நலனையும் கருத்தில் கொண்டு, மின்சாரத்தை வெளிச்சந்தையிலிருந்து பெறும் நிறுவனங்கள் மீது கூடுதலாக 34 காசுகள் மேல்வரி விதிப்பதை கைவிட வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.160 உயர்வு

சென்னை, 29 மே 2024: சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 உயர்ந்து சவரன் ரூ.53,920 க்கு விற்பனையாகிறது.

தங்கத்தின் விலை அண்மை காலமாக கடும் விலை ஏற்றத்தில் இருந்து வருகிறது. அதிலும் திடீர் விலை ஏற்றம் மற்றும் இறக்கம் என்றும் மாறி மாறி இருந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, சென்னையில் நேற்று ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு 65 ரூபாய் உயர்ந்தது. இதன் மூலம் ஒரு கிராம் 6,720 ரூபாய்க்கும், சவரனுக்கு ரூ.520 உயர்ந்த நிலையில் ஒரு சவரன் தங்கத்தின் விலை 53 ஆயிரத்து 760 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் 22 கேரட் ஆபரணத்தங்கத்தின் விலை இன்று சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.53,920 க்கு விற்பனையாகிறது. கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.6,740 க்கும் விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளியின் விலை கிராமுக்கு ரூ.3.50 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.101.50-க்கும், ஒரு கிலோ ரூ. 1,01,500-க்கும் விற்பனையாகிறது.

# 1-ந் தேதி இந்தியா கூட்டணி தலைவர்கள் சந்திப்பு: டெல்லி செல்கிறார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்




சென்னை, 29 மே 2024: மத்தியில் ஆட்சி அமைப்பது யார்? என்பது குறித்து 'இந்தியா' கூட்டணி டெல்லியில் வருகிற 1ந் தேதி ஆலோசனை கூட்டம் நடத்த உள்ளது. இதில் பங்கேற்க கூட்டணி கட்சி தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்பதற்காக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் டெல்லி செல்ல உள்ளா□ர்.

வருகிற 1ந் தேதி இறுதியாக 7வது கட்டமாக 57 தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. தொடர்ந்து 4ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். அன்று மதியம் மத்தியில் ஆட்சியை பிடிப்பது யார் என்பது உறுதியாகிவிடும். நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 543 இடங்களில் 272 இடங்களை பெறும் கட்சி ஆட்சி அமைக்கும்.

பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி 3-வது தடவையாக ஆட்சி அமைக்க தீவிரமாக உள்ளது. 400-க்கும் மேற்பட்ட இடங்களை குறி வைத்து அந்த கட்சி பிரச்சாரம் செய்துள்ளது. ஆனால் 'இந்தியா' கூட்டணி தலைவர்கள் தாங்கள்தான் மத்தியில் ஆட்சியை கைப்பற்றுவோம் என்று கூறி வருகிறார்கள். தங்களுக்கு 350 இடங்கள் வரை கிடைக்க வாய்ப்பு இருப்பதாகவும் 'இந்தியா' கூட்டணி தலைவர்கள் தெரிவித்து வருகிறார்கள்.

இதன் காரணமாக மத்தியில் யார் ஆட்சி அமையும் என்பதில் மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வருகிற 1ந் தேதி இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் டெல்லியில் கூடி ஆலோசனை நடத்த முடிவு செய்துள்ளனர். 'இந்தியா' கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., சமாஜ்வாடி, தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், உத்தவ் தாக்கரேயின் சிவசேனா, ராஷ்டிரீய லோக்தளம் உள்பட 28 கட்சிகள் உள்ளன.

இந்த 28 கட்சி தலைவர்களுக்கும் டெல்லியில் வருகிற 1ந் தேதி நடக்கும் கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. இக்கூட்டத்தில் இந்தியா கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்பதற்காக தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் டெல்லிக்கு பயணம் மேற்கொள்ள உள்ளார். வருகிற 1ந்தேதி டெல்லிக்கு பயணம் மேற்கொள்ளும் மு.க.ஸ்டாலின் 2ந்தேதி சென்னை திரும்புகிறார்.

இதனிடையே, இந்தியா கூட்டணி தலைவர்கள் கூட்டத்தில் பேச வேண்டிய முக்கிய விஷயங்கள் குறித்து தி.மு.க. நிர்வாகிகளுடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக, இந்தியா கூட்டணி தலைவர்களுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டத்தில் தான் பங்கேற்கப் போவதில்லை என திரிணாமுல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். கூட்டணி கட்சிகள் முடிவுக்கு கட்டுப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் 7 கட்ட தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகள் எப்படி செயலாற்றி உள்ளன என்பது பற்றி ஆய்வு செய்ய உள்ளனர். தேர்தல் முடிவுகள் எப்படி அமையும் என்பது பற்றியும் விவாதிக்க இருக்கிறார்கள். தேர்தல் முடிவுகளை பொறுத்து அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பது பற்றியும் கூட்டத்தில் முடிவு செய்ய இருக்கிறார்கள். மத்தியில் இந்தியா கூட்டணி ஆட்சி அமைக்கும் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் எப்படி ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது. இதன் காரணமாக 1-ந் தேதி நடைபெற உள்ள இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

# மிசோரமில் நெஞ்சைப் பிளக்கும் சம்பவம் கனமழையால் கல்குவாரியில் பாறைகள் சரிந்தன: 14 பேர் பலி

சென்னை, 29 மே 2024: கனமழை காரணமாக கல்குவாரியில் பாறைகள் சரிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் சிக்கியுள்ள நிலையில் அவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

மிசோரம் மாநிலம் ஐஸ்வால் மாவட்டத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது. இது பற்றிய விவரம் வருமாறு:

நாட்டின் கிழக்குப் பகுதியில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்திய ரீமால் புயல், மேற்கு வங்கம் மற்றும் வங்கதேசம் கடற்கரைகளுக்கு இடையே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கரையைக் கடந்தது. இந்நிலையில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக மிசோரம் மாநிலம் ஐஸ்வால் மாவட்டத்தில் கல்குவாரி இடிந்து விழுந்தது. இதில் 14 பேர் உயிரிழந்தனர். பலர் சிக்கியுள்ள நிலையில் அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், அப்பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதாலும் தேடும் பணி பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மிசோரமில் புயல் பாதிப்புக்கு உள்ளான பகுதிகளில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. வீட்டில் இருந்தே வேலை செய்யும்படி அரசு ஊழியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். பல நெடுஞ்சாலைகளும், முக்கிய சாலைகளும் நிலச்சரிவுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர். ஹன்தாரில் தேசிய நெடுஞ்சாலை 6ல் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக ஐஸ்வால், நாட்டின் பிற பகுதிகளிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பல நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய சாலைகள் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளன.

ரீமால் புயல் மேற்கு வங்கத்தில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஏராளமான வீடுகள் சேதமடைந்துள்ளன. பல்வேறு இடங்களில் மின் கம்பங்கள் கீழே சரிந்ததை அடுத்து, அவற்றை சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரும்பாலான இடங்களில் மரங்கள் வேரோடு சரிந்துள்ளதால் அவற்றை அப்புறப்படுத்தும் பணிகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். புயல் தாக்குவதற்கு முன்பாக மேற்கு வங்கத்தில் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் இருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதனிடையே, அடுத்த 2 நாட்களுக்கு அசாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களில் மிக கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# மோடியின் தோல்வி பயத்தால் தொடரும் அநாகரீக தேர்தல் பிரச்சாரம் செல்வப்பெருந்தகை காட்டம்

சென்னை, 29 மே 2024: தேர்தல் தோல்வி பயத்தால், தேர்தல் பரப்புரையில் அநாகரீகமாக பேசி வந்த நரேந்திர மோடி, எதிர்க்கட்சியினர் ஆபாச நடனம் ஆடி மகிழ்ந்து கொள்ளலாம் என்று தரம் தாழ்ந்து பேசி இருப்பது கண்டனத்துக்குரியது என்று செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இது குறித்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

மக்களவை தேர்தல் பரப்புரையின் தொடக்கத்திலேயே காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை திரித்துக் கூறி, முஸ்லிம் லீக்கின் தேர்தல் அறிக்கையைப் போல இருப்பதாக கூறி, அபத்தமான வாதங்களை நாள்தோறும் பிரதமர் மோடி பேசி வந்தார். மேலும் காங்கிரசின் மறுப்பையும் பொருட்படுத்தாமல், மத அடிப்படையில் மக்களை பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேட முற்படுகிற பரப்புரையை பாசிச போக்கு கொண்ட நரேந்திர மோடி நிறுத்திக் கொள்ளவில்லை.

முதல்கட்ட தேர்தலில் தமிழ்நாட்டில் தொடங்கிய மோடி எதிர்ப்பு அலை, 6 கட்டங்களாக இந்தியாவின் மற்ற பகுதிகளிலும் எதிரொலிக்க தொடங்கியதால் தேர்தல் கள நிலவரத்தை உளவுத்துறை மூலம் அறிந்த பிரதமர் மோடியின் பேச்சில் பதற்றமும், அச்சமும் தொடர்ந்து வெளிப்பட ஆரம்பித்தன. காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் இராமர் கோயிலை புல்டோசர் வைத்து இடித்து விடுவார்கள் என்று கூறுவதை விட முட்டாள்தனமான பேச்சு வேறு எதுவும் இருக்க முடியாது.

அதோடு நிற்காமல் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மத அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்க அரசியல் சட்டத்தையே மாற்றி விடுவார்கள் என்றும், தற்போது எஸ்.சி., எஸ்.டி., ஒ.பி.சி. மக்களுக்கு வழங்கப்படுகிற இடஒதுக்கீட்டை பறித்து இஸ்லாமியர்களுக்கு வழங்கி விடுவார்கள் என்று கடைந்தெடுத்த ஆதாரமற்ற அவதூறு பிரச்சாரத்தை சமீபகாலமாக தொடர்ந்து பிரதமர் மோடி நவீன கோயபல்ஸ் போல பேசினார். இடஒதுக்கீடு என்பது மதத்தின் அடிப்படையில் வழங்கப்படுவதில்லை என்று பல நீதிமன்ற தீர்ப்புகள் உறுதி செய்திருக்கின்றன. இடஒதுக்கீடு என்பது மதங்களை பொருட்படுத்தாமல் சமூக, கல்வி ரீதியாக பின்தங்கிய நிலையில் உள்ள அனைவருக்கும் வழங்கப்படுகிறது. இந்து மதத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இடஒதுக்கீட்டில் எப்படி பங்கு இருக்கிறதோ, அதேபோல் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சீக்கிய மதத்தை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பங்கு இருக்கிறது.

உண்மை நிலை இப்படியிருக்க சிறுபான்மையின மக்களுக்கு எதிராக வெறுப்பு பேச்சை பரப்புரையில் திரும்பத் திரும்ப கூறுவதன் மூலமாக தேர்தலில் வெற்றி பெற்று விடலாம் என்று மோடி பகல் கனவு காண்கிறார். ஆனால், 10 ஆண்டுகால பா.ஜ.க. ஆட்சியில் கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாத காரணத்தால் விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், தவறான ஜி.எஸ்.டி. அமலாக்கம், விவசாயிகளின் விளைப் பொருட்களுக்கு நியாய விலை மறுப்பு, மாநில உரிமைகள் பறிப்பு என மக்கள் விரோத ஆட்சி நடத்தியதால் மக்களிடையே பா.ஜ.க. ஆட்சிக்கு எதிராக அலை வீசிக் கொண்டிருக்கிறது.

மோடி தனது பரப்புரையில் எதிர்கட்சியினரை மிகமிக இழிவாக தரக்குறைவான முறையில் பிரதமர் பதவியை வகிக்கிறோம் என்கிற குறைந்தபட்ச நாகரீகம் கூட இல்லாமல் பேசி வருகிறார். முகலாய அரசவையில் நடத்தப்படுகிற முஜ்ரா நடனத்தை எதிர்கட்சியினர் நடத்தி மகிழ்ந்து கொள்ளலாம் என்று கூறியிருக்கிறார். ஒரு பிரதமர் ஆபாச நடனத்தை மேற்கோள் காட்டி எதிர்கட்சியினரை தேவையில்லாமல் இழிவுபடுத்துவது நரேந்திர மோடியின் அரசியல் அநாகரீகத்தையே காட்டுகிறது.

தேர்தல் பரப்புரையில் மக்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில் நரேந்திர மோடி தன்னை கடவுளின் அவதாரம் என்றும், 'தாய் தன்னை பெற்றெடுக்கவில்லை என்று கூறும் ஒருவர், உயிரியல் வழிமுறைப்படி தான் பிறக்கவில்லை என்று கூறும் ஒருவர், இந்திய நாட்டின் பிரதமராக இருப்பதற்கு மனரீதியாக தகுதியுடைவர் தானா?" என்கிற கேள்வி நாட்டு மக்களிடையே எழுந்திருக்கிறது.

கடந்த 10 ஆண்டுகளாக, மக்களை மதரீதியாக ஏமாற்றியதைப் போல 2024 இல் ஏமாற்ற முடியாது. மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள். மக்களின் வாழ்வாதாரத்தை சீர்குலைத்த மோடியின் ஆட்சியை அகற்றி பாடம் புகட்டுவதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்தியா கூட்டணி ஜூன் 4 ஆம் தேதிக்கு பிறகு ஆட்சி அமைக்கப் போவது உறுதி. இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

# இந்தியாவில் இளம் பட்டதாரிகளுக்கான வேகமாக வளர்ந்து வரும் வேலைகள் அதன் செயல்பாடுகள் மற்றும் அவர்களுக்கான தொழில்களை லிங்க்ட்இன் வெளியிடுகிறது

சென்னை, 29 மே 2024: வேலை சந்தையில் நுழைய விரும்பும் புதிய பட்டதாரிகளுக்காக, உலகின் மிகப்பெரிய தொழில்முறை வலையமைப்பான லிங்க்ட் இன், இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்கள், செயல்பாடுகள் மற்றும் திறன்கள் பற்றிய புதிய தகவல்களை இன்று வெளியிட்டுள்ளது. இதில் வடிவமைப்பு, பகுப்பாய்வு மற்றும் நிரலாக்கம் ஆகியவை இன்று அவர்களின் ஆரம்பநிலை சிறந்த திறன்கள் என்பதை லிங்க்ட்இன் தரவு வெளிப்படுத்துகிறது.

2024 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் நெகிழ்வுத்தன்மையைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்கின்றன, மேலும் பணியாளர்கள் தேவைக்கு ஏற்ப பணி ஏற்பாடுகளை நோக்கிய போக்கு கணிசமாக வளர்ந்து வருகிறது. ஆன்-சைட் பாத்திரங்கள் மட்டுமே 15% குறைந்து வருகின்றன, மேலும் ஆண்டுக்கு ஆண்டுஆரம்ப நிலை கலப்பின நிலைகள் 52% அதிகரித்து வருகின்றன. இந்த மாற்றமானது புதிய பட்டதாரிகளுக்கு பரந்த அளவிலான பணி ஏற்பாடுகளை தேர்வு செய்யவும் மற்றும் தொடரவும் வழங்குகிறது.

லிங்க்ட் இனின் தொழில் ஸ்டார்ட்டர் 2024 அறிக்கையின்படி, இளங்கலை பட்டம் பெற்ற இளம் தொழில் வல்லுநர்களுக்கு யுடிலிட்டிஸ் மிக வேகமாக வளர்ந்து வரும் துறையாகும். புதிய பட்டதாரிகளை பணியமர்த்தும் மற்ற சிறந்த தொழில்களில் எண்ணெய், எரிவாயு மற்றும் சுரங்கம், ரியல் எஸ்டேட், உபகரணங்கள் வாடகை சேவைகள் மற்றும் நுகர்வோர் சேவைகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, இளங்கலை பட்டம் இல்லாதவர்களுக்கு கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தகவல் மற்றும் ஊடகத் துறைகளில் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.

லிங்க்ட்இன் தரவு பல்வேறு கல்வித் தகுதிகளைக் கொண்ட தொழில் வல்லுநர்களுக்கான பல்வேறு வகையான சிறந்த வேலைகளை வெளிப்படுத்துகிறது. இளங்கலை பட்டம் பெற்றவர்கள் மென்பொருள் பொறியாளர், கணினி பொறியாளர் மற்றும் நிரலாக்க ஆய்வாளர் போன்ற பாத்திரங்களை தேர்ந்தேடுக்கலாம். மென்பொருள் பொறியாளர் மற்றும் தரவு ஆய்வாளராக பணியமர்த்தப்பட்டு வரும் முதுநிலை பட்டதாரிகள் அதிகரித்து வருகின்றனர். பட்டம் இல்லாதவர்கள் சாப்ட்வேர் இன்ஜினியர், செக்ரட்டரி மற்றும் டிசைன் இன்ஜினியர் போன்ற பணிகளில் நிறைவான வேலைகளைக் காணலாம்.

கல்விப் பின்னணியைப் பொருட்படுத்தாமல், பல்வேறு வேலை செயல்பாடுகள் விரைவான வளர்ச்சியை அனுபவித்து வருகின்றன. சமூகம் மற்றும் சமூக சேவைகள், சட்டம், சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகம் மற்றும் தொடர்பு போன்ற துறைகளில் இளங்கலை பட்டம் பெற்றவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இளங்கலைப் பட்டம் இல்லாத நபர்களுக்கு, கல்வி, மனித வளம், சந்தைப்படுத்தல் மற்றும் ஊடகம் மற்றும் தொடர்பு ஆகியவற்றில் ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. "ஒரு இறுக்கமான வேலை சந்தையில் நுழைவது கடினமாக இருக்கும், குறிப்பாக ஒரு தொழில் பயணத்தின் தொடக்கத்தில். தொழில்துறையின் போக்குகள் மற்றும் தேவைக்கேற்ப வேலைகள் குறித்து புதுப்பித்த நிலையில் இருப்பது மற்றும் முதலில் வெளிப்படையாகத் தோன்றாத பாத்திரங்களை ஆராய்வது, விருப்பங்களை விரிவுபடுத்தலாம். இன்று பல திறன்கள் தொழில்கள் முழுவதும் மாற்றப்படுகின்றன, மேலும் ஏ ஐ-ன் எழுச்சி பல்வேறு துறைகளில் தொழில்நுட்பம் தொடர்பான பாத்திரங்களை உருவாக்குகிறது, பல்வேறு கல்விப் பின்னணி கொண்ட தொழில் வல்லுநர்களைத் தேட முன்னணி நிறுவனங்கள், இந்த பணியமர்த்தல் போக்குகள் எரிசக்தி துறையில் உள்ளதைப் போன்ற பரந்த பொருளாதார வடிவங்களை பிரதிபலிக்கின்றன. தங்கள் எல்லைகளை விரிவுபடுத்த, வேலை தேடுபவர்கள் தங்கள் திறன்களை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் மற்றும் தொழில் வல்லுநர்களுடன் நெட்வொர்க்கிங் செய்ய வேண்டும், என்கிறார் லிங்க்ட்இன் கேரியர் எக்ஸ்பர்ட் & இந்தியா சீனியர் மேனேஜிங் எடிட்டர் நிரஜிதா பானர்ஜி.